[20th March 1964

திரு. து. ப. அழகமுத்து : பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே புத்தகங்கள் செலக்ட் செய்வதிலே அந்தக் கமிட்டியில் அபிப்பிராய பேதம் இருந்ததைப்போல் பல ஹரிஜன நல பள்ளிகளுக்கு புத்தகங்கள் செலெக்ட் செய்வதிலும் ஏதாவது தகராறு இருந்ததா திருச்சி மாவட்டத்தில் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர் பார்த்து அவரே செய்யலாம். இதிலே தகராறு ஒன்றுமில்லை. அதற்கு கமிட்டி ஒன்றும் கிடையாது. கலெக்டருக்கே அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அவரே பார்த்து எந்த புத்தகங்கள் வேண்டுமானாலும் வைக்கலாம். ஹரிஜன நல இலாகா அதிகாரியும் அதில் கலந்துகொள்வார்.

புலவர் கா. கோவிந்தன் : துவக்கப்பள்ளி, உயர் துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுந்தான் புத்தகங்கள் அளிக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். (கனம் திரு. பூ. கக்கன் ; "மட்டும்தான்" என்று சொல்லவில்லை. பெரும் பகுதி என்று சொன்னேன்.) உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் புத்தகங்கள் அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன உயர்நிலைப்பள்ளிகள் சிதம்பரம், திருத்தலையூரில் இருக்கின்றன. உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கு என்ன வாங்கிக் கொடுக்கிறோம் என்ற தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

திரு. து. ப. அழகமுத்து : வரும் கல்வி ஆண்டிலாவது பள்ளிகள் திறந்த உடனே மாணவர்களுக்கு புத்தகங்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு பூ. கக்கன் : பள்ளிகள் திறந்தவுடனேயே புத்தகங்கள் வழங்கப்படவேண்டும் என்பதுதான் ஹரிஜன நல இலாகா கட்டளை.

திருமதி சி. குழந்தையம்மாள் : மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்குவதற்கு நன்கொடைகள் வழங்குவதில் ரூ. 10-க்கு மேல் இருந்தால், அவர்களுக்கு வருமான வரி சம்பந்தப்பட்டவரை அந்தத் தொகைக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று ஹரிஜன மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க முன்வந்த கோவையிலே ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தார் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதைப்பற்றி தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

ஆசிரியர்களுக்கு தேசீயப் பரிசு

* 332. கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்தாரால் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் தேசீயப் பரிசு (National Award) எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது ?

(இ) ஆண்டு ஒன்றுக்கு இம்மாநிலத்திலுள்ள எத்தனை ஆசிரியர்கள் பெயர்கள் சிபாரிசு செய்யப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Teachers with a minimum of twenty years teaching experience as teachers or as headmasters are eligible to be considered for the National Awards on the basis of their record of work.

(*b*) Six names of Elementary School teachers and three names of Secondary School teachers are being recommended from this State every year.